[திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்] [1989 பிப்ரவரி 21

220 மாணவர்கள் சத்துணவு சாப்பிடலாம் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 15—2—1989 அன்று 220 குழந்தைகள் சாப்பிட உணவு தயார் செய்யப்பட்டது. பகல் 1-30 மணிக்கு மதிய உணவு பரிமாறியபோது சிறிய அரணை ஒன்று சாம்பாரில் விழுந்ததைக் கண்ட உடனே உணவு பரிமாறுவது நிறுத்தப்பட்டது. உடனடியாக அருகிலுள்ள காஞ்சிபுரம் மருத்துவமனைக்கு பாதிக்கப்பட்ட அந்த மாணவர்கள் எடுத்துச் செல்லப்பட்டனர். அங்கே அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அதில் 99 பேர்களுக்கு மதிய உணவு வழங்குவது உடனடியாக நிறுத்தப்பட்டது. சிகிச்சை பெற்ற 116 பேர் உடனடியாக, திரும்ப வீட்டுககு அனுப்பப்பட்டனர். 5 பேர் மட்டும் சிகிச்சைக்காகப் படுக்கைகளில் அனுமதிக்கப்பட்டு 16—2—1989 அன்று அவர்களுக்கும் எந்த ஆபத்தும் இல்லை என்று மருத்துவர்கள் அவர்களையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டனர். எனவே, சத்துணவு சாப்பிட்ட அவர்களுக்கு எந்த வகையிலும், எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவருக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. சத்துணவு சமைக்கப்படுகிற இடம், பரிமாறப்படுகிற இடம் தூய்மையாக வைத்துக்கொள்ளப்பட வேண்டுமென்றும், சத்துணவு சமைக்கப்பட்டு, பரிமாறுவதற்கு முன்பாக சத்துணவு வகைகள் எல்லாம் நல்லமுறையில் மூடி பாதுகாப்பாக வைத்துக்கொள்ளப்பட வேண்டுமென்றும், அங்கு பணியாற்றுகிறவர்கள் இந்த விஷயத்தில் சற்று எச்சரிக்கையாக இருந்து செயல்பட வேண்டுமென்றும் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, இனிமேல் இது போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறாது என்று மாண்புமிகு உறுப்பினருக்கு மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-30)

(எ) மூடப்பட்டுள்ள பஞ்சாலைகளைத் திறக்க நடவடிக்கை.

திரு. இரா. மோகன்: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கூட்டத் தொடருடைய கடைசி நாள் இன்று. மிக முக்கியமான பிரச்சினையை உங்கள் மூலமாக அரசின் கவனத்திற்கும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன். மூடப்பட்ட பஞ்சாலைகளின்

1989 பிப்ரவரி 21] [திரு. இரா. மோகன்]

பிரச்சினை அது. 30க்கும் மேற்பட்ட பஞ்சாலைகள் மூடப் பட்டிருக்கின்றன. அவற்றைத் திறப்பதற்கு பேச்சுவார்த்தை இந்த மாத இறுதிக்குள் நடத்த இருப்பதாக மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்கள் அறிவித்திருக் கிறார்கள். என்றைக்குப் பேச்சு வார்த்தை நடத்தப்பட இருக் கிறது? யார் யாரை அழைத்துப் பேச இருக்கிறீர்கள், எங்கு பேச்சு வார்த்தை நடைபெறப் போகிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். காரணம், ஆயிரக்கணக்கான தொழி லாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பல ஆலைகள் ஆண்டுக் கணக்கில் மூடப்பட்டிருக்கின்றன; பல பஞ்சாலைகள் மாதக் கணக்கில் மூடப்பட்டிருக்கின்றன . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறீர்கள், தெரிவித்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இன்று நிறைவுநாள் என்ற காரணத்தாலே மூடிய ஆலைகளைப் பற்றிய விவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று கருது கிறார். மூடிய ஆலைகள் 30 அல்ல. சமீபத்திலே எடுக்கப் பட்ட கணக்கின்படி 25 ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அதிலே வேலையில்லாமல் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக் கெல்லாம் வேலை வாய்ப்பு வழங்க வேண்டுமென்ற அடிப் படையில் இந்த அரசு தொடர்ந்து முயற்சி எடுத்துக்கொண்டிருக் கிறது. வருகிற 25 ஆம் தேதி தொழிற்சங்கத் தலைவர்களையும், நிர்வாகத்தையும் அழைத்து, சென்னையிலே பேச்சு வார்த்தை நடைபெற இருக்கிறது. தொடர்ந்து இந்த அரசு மூடிய ஆலை களைத் திறப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஏ) கல்லணைக் கால்வாயிலிருந்து தண்ணீர் விடவேண்டியதன் அவசியம்.

திரு. ஆர். சிங்காரம்: பேரவைத் தலைவரவர்களே. நான் மிக அவசரமான பிரச்சினை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். தாங்கள் அதை 56-வது விதியின்கீழ் மாற்றி இருக்கிறீர்கள். அது சபையில் வரவில்லை. அது மிக மிக அவசரமான விஷயம். அங்கே "காரிப்" பயிர்கள் கருகிக்